volunteering australia

தகவல் ஏடு - Tamil

# சுயவிருப்பத் தொண்டருக்கான உரிமைகள் மற்றும் சுயவிருப்பத் தொண்டர் சரிபார்ப்பு அட்டவணை

# (Volunteer Rights & Volunteer Checklist)

ஊதியம் பெறும் ஊழியரைப் போலன்றி, சுயவிருப்பத் தொண்டர்கள் வெகுமானங்கள் அல்லது பணியிட ஒப்பந்தங்கள் ஆகியவற்றினால் காப்பு செய்யப்படுவதில்லை. இருப்பினும் சுயவிருப்பத் தொண்டர்களுக்கென உரிமைகள் உண்டு, இவற்றில் சில சட்டங்களில் சிறப்பிடம் பெற்றுள்ளன மற்றும் சில சுயவிருப்புத் தொண்டர்களை ஈடுபடுத்தும் அமைப்பின் தார்மீகக் கடமைகளாகக் கருதப்படுகின்றன. Volunteering Australia எனும் அமைப்பானது கீழ்வருவனவற்றை சுயவிருப்பத்தொண்டர் ஒருவரது அடிப்படை உரிமைகளாக முன் வைக்கிறது.

**சுயவிருப்புத் தொண்டராகப் பணியாற்றும் போது கீழ்வரும் உரிமைகள் உங்களுக்குண்டு:**

- சுகாதாரமான மற்றும் பாதுகாப்பான சூழல்களில் பணியாற்றல் (பல்வேறு பணியிட சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு சட்ட(Occupational Health and Safety Act[s])ங்களைப் பார்க்க);
- சம வாய்ப்பு மற்றும் வேற்றுமைப்படுத்தப்படலுக்கு எதிரான சட்டம் ஆகியவற்றின் பிரகாரம் நேர்முகத் தேர்வு செய்யப்படுதல் மற்றும் பணியில் அமர்த்தப்படல்;
- காப்பீட்(insurance)டினால் போதிய பாதுகாப்பு வழங்கப்படுதல்;
- நீங்கள் பணியாற்றும் அமைப்பு குறித்த துல்லியமான மற்றும் உண்மையான தகவல்கள் தரப்படல்;
- உங்கள் கையிலிருந்து செலவழிக்கும் சொந்தப் பணம் திரும்ப வழங்கப்படல்;
- நிறுவனங்களின் சுயவிருப்புத்தொண்டர் கொள்கைகள் மற்றும் உங்கள் சேவையைப் பாதிக்கவல்ல எவ்வொரு இதர கொள்கைகளின் பிரதி ஒன்று உங்களுக்கு வழங்கப்படல்;
- முன்னராக ஊதியம் பெறும் ஊழியர் ஒருவர் பணியாற்றிய இடத்தினை நிரப்புவதற்காக நீங்கள் அமர்த்தப்படாமலிருத்தல்;
- தொழிற்சாலைச் சச்சரவுகளின் போது, ஊதியம் பெறும் ஊழியரது வேலைகளைச் செய்யாமலிருத்தல்;
- நீங்கள் செய்யப் போகும் வேலையைப் பற்றிய விளக்கம் மற்றும் ஒத்துக்கொள்ளப்பட்ட வேலை நேரங்கள் ஆகியவற்றைப் பெறல்;
- குறைகளைத் தெரிவிப்பதற்கான நடைமுறைகளை அணுகும் வசதியைப் பெறல்;
- நிறுவனத்தைப் பற்றிய முன்னனறிவிப்பான தகவல்கள் தரப்படல்;
- 1988-ஆம் ஆண்டின் தனிப்பட்ட தகவல் பாதுகாப்புச் சட்ட(Privacy Act 1988)க் கொள்கைகளின் படி உங்களது இரகசிய மற்றும் தனிப்பட்ட தகவல்கள் கையாளப்படல் மற்றும;
- உங்களது பணியினைச் செய்யப் போதுமான பயிற்சி அளிக்கப்படல்.

**பின்வருவனவற்றைச் சரிபாருங்கள்:**

- நீங்கள் பணியாற்றும் அமைப்பு இலாபத்திற்காக இயங்குவதல்ல;
- இந்த அமைப்பின் நோக்கம் உங்களது சொந்த விழுமியங்கள் மற்றும் நம்பிக்கைகளுடன் ஏற்புடையதாக இருத்தல்;
- சுயவிருப்பத் தொண்டர் காப்பீட்டினை நிறுவனம் கொண்டிருத்தல்;
- உங்களது பங்கு என்னவென்று தெளிவாகவும், குறிப்பாகவும் காண்பித்தல்;
- தனது நோக்கம் மற்றும் நடவடிக்கைகள் குறித்த எழுத்து மூலமான தகவல்களை நிறுவனத்தினால் உங்களுக்குத் தர இயலுமாக இருத்தல்; மற்றும
- நிறுவனத்தின் நிதி வசதிகள் நிறுவனத்தின் குறிக்கோள்களுக்கென செலவிடப்படுகின்றன என்று உங்களுக்குத் திருப்தியடையக் கூடியதாக இருத்தல்.

**Volunteering Australia**
**Suite 2, Level 3**
**11 Queens Road**
**Melbourne Victoria 3004**
**Australia**

தொலைபேசி: +61 (0)3 9820 4100
தொலைநகல்: +61 (0)3 9820 1206
மின்னஞ்சல்: volaus@volunteeringaustralia.org
இணையதளம்: www.volunteeringaustralia.org

ARBN: 062 806 464
© 2009 Volunteering Australia